# December 25, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவின் ப்ளூபேர்ட்-6 தகவல் தொடர்பு செயற்கைக்கோளுடன் எல்விஎம்-3 ராக்கெட் வெற்றிகரமாக புதன்கிழமை (டி.ச. 24) விண்ணில் செலுத்தப்பட்டது. இஸ்ரோ அனுப்பியதிலேயே அதிக எடை கொண்ட (6,100 கிலோ) அந்தச் செயற்கைக்கோள், திட்டமிட்ட பாதையில் துல்லியமாக நிலைநிறுத்தப்பட்டது.

   i. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) கீழ் செயல்படும் நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம் வெளிநாட்டு செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

   ii. அதன்படி, இதுவரை 430-க்கும் மேற்பட்ட வெளிநாட்டு செயற் கைக்கோள்களை நியூஸ்பேஸ் நிறுவனம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. பெரும்பாலான உலக நாடுகளின் விண்வெளி ஆய்வு நடவடிக்கைகளுக்கு இஸ்ரோ பங்களித்து வருகிறது.

   iii. அந்த வகையில், அமெரிக்காவின் ஏஎஸ்டி ஸ்பேஸ்மொபைல் நிறுவனத்தின் ப்ளூபேர்ட்-6 செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோவின் நியூஸ்பேஸ் அமைப்பு புரிந்துணர்வு மேற்கொண்டது.

   iv. இந்தச் செயற்கைக்கோள் அதிக எடை கொண்டது என்பதால், இந்தியாவின் 'பாகுபலி' ராக்கெட்டான எல்விஎம் 3 மூலம் விண்ணில் செலுத்துவதற்கு இஸ்ரோ முடிவு செய்தது.

   v. ப்ளூபேர்ட்-6 செயற்கைக்கோளின் மொத்த எடை 6,100 கிலோவாகும். இத்தகைய அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை செலுத்துவதற்காகவே ஜிஎஸ்எல்வி மார்க் 3 அல்லது எல்விஎம் 3 என்ற அதிநவீன ராக்கெட்டை இஸ்ரோ உருவாக்கியுள்ளது. இதன் வாயிலாக புவி தாழ்வட்டப் பாதையில் 8,000 கிலோ எடை கொண்ட செயற் கைக்கோள்களையும், ஒத்திசைவுப் பாதையில் 4,000-க்கும் அதிகமான எடை கொண்ட செயற்கைக்கோள்களையும் நிலைநிறுத்த முடியும்.

   vi. இந்நிலையில், எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ப்ளூபேர்ட்-6 செயற்கைக்கோளை ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து செலுத்த முடிவு செய்யப்பட்டது.

   vii. இந்த வெற்றியின் மூலம் 1993- ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை 34 நாடுகளின் 434 செயற் கைக்கோள்களை செலுத்திய பெருமையை இஸ்ரோ பெற்றுள்ளது.

   viii. ப்ளூபேர்ட் - 6 செயற்கைக்கோள் விண்வெளியில் இருந்து நேரடியாக கைப்பேசிகளுக்கு அதிவேக இணைய சேவையை வழங்கும். இதன்மூலம் சிக்னல் கோபுரங்கள் இல்லாத அடர்ந்த காடுகள், மலைப் பகுதிகளில், நீர்த்தடங்களில் 5ஜி வேகத்தில் இணையம், விடியோ அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளைப் பெறமுடியும்.

ix. ப்ளூபேர்ட் -6 திட்டம் வெற்றிக்குப் பின்னர். இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் செய்தியாளர்களி டம் கூறியதாவது: எல்விஎம் 3 ராக்கெட்டின் 9-ஆவது வெற்றி கரமான பயணம் இது. இதன்மூலம் எல்விஎம் 3 ராக்கெட் 100 சதவீத நம்பகத்தன்மையைப் பெற்றுள் ளது. ஏற்கெனவே சந்திரயான்-3, ஒன்வெப் செயற் கைக்கோள்கள் போன்ற பல்வேறு திட்டங்களையும் எல்விஎம் 3 வெற்றிகரமாக மேற்கொண்டது. இதன் வாயிலாக உலக அரங்கில் இஸ்ரோ முக்கியத்துவம் பெற்றுள் ளது. அதுமட்டுமல்லாது பல்வேறு நாடுகளும் தங்களது செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்புவதற்காக இஸ்ரோவை நாடுகின்றன. இந்த வெற்றி மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கு உத்வேகமாக அமைந்துள்ளது. குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளப் பணிகள் நிறைவடைந்து 2027, மார்ச் மாதத்துக்குள் ராக்கெட் விண்ணில் செலுத்தப்படும் என்றார் அவர்.

2. அதிநவீன 20 குளிர்சாதன சொகுசு பேருந்துகளின் சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

i. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்துக்கு ரூ.34.30 கோடியில் பல அச்சுகள் கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் வாங்கப்பட்டன. தமிழ்நாடு போக்குவரத்துத் துறை மூலம் முதல்முறையாக இந்தப் பேருந்துகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

ii. மேலும், அரசு போக்குவரத் துக்கழக பொன்விழாவையொட்டி 1,05,778 ஊழியர்களுக்கு ரூ.3.33 கோடியில் சுவர் கடிகாரங்கள் வழங்கும் நிகழ்வையும் முதல்வர் தொடங்கி வைத்தார்.

3. கிழக்கு உக்ரைனில் படைவிலக்கப் பகுதிகளை உருவாக்கும் கொள்கைக்கு உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி ஒப்புதல் அளித்துள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

i. உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் நடைபெற்றுவரும் பேச்சுவார்த் தையில், கிழக்கு உக்ரைனில் படை விலக்கப் பகுதிகளை உருவாக்கும் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆனால் ரஷியாவும் அதேபோல் தனது படைகளை பின்வாங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

ii. டான்பாஸ் பகுதியில் பிராந்தியக் கட்டுப்பாடு, ஸபோரிஷியா அணு உலையை நிர்வகிப்பது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் இன்னும் உடன்பாடு ஏற்படவில்லை.

iii. இருந்தாலும், போரை முடிவுக்குக் கொண்டுவரும் பல முக்கிய விவகாரங்களில் அமெரிக்காவுக்கும் உக்ரைனுக்கும் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது.

iv. அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் நடந்த நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 20 அம்ச போர் நிறுத்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த திட்டத்தை ரஷிய பிரதிநிதிகளிடம் அமெரிக்கா தெரியப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ரஷியாவிடம் இருந்து விரைவில்

பதில் வரும் எதிர்பார்க்கப்படுகிறது.

v. டான்பாஸ் பகுதியில் உள்ள டொனட்ஸ்க், லுஹான்ஸ்க்பிராந் தியங்களின் கட்டுப்பாடுதான் இருப்பதிலேயே மிகவும் முக்கியமான பிரச்னையாக உள்ளது. இது குறித்து தலைவர்கள் அளவில் ஆலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

vi. இந்த ஒப்பந்த திட்டத்தின் கீழ் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கும் பாதுகாப்பு உத்தரவாதம் நேட்டோ ஒப்பந்தத்தின் 5-ஆம் பிரிவைப் போன்றது. அதன்படி ரஷியா மீண்டும் தாக்குதல் நடத்தினால் கூட்டணி நாடுகள் பதிலடி நடவடிக்கை மேற்கொள்ளும் என்று உறுதி அளிக்கப்படும் என்றார் ஸெலென்ஸ்கி.

vii. நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷியா அந்த நாட்டின் மீது கடந்த 2022-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் படையெடுத்து, டொனட்ஸ்க், லுஹான்ஸ்க், கெர்சான், ஸபோரிஷியா ஆகிய கிழக்குப் பிராந்தியங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. தற்போது லுஹான்ஸ்கில் மிகப் பெரும்பாலான பகுதிகளும், டொனட்ஸ்கில் 70 சதவீத பகுதிகளும் ரஷிய கட்டுப்பாட்டில் உள்ளன. போரை நிறுத்த வேண்டுமென்றால் எஞ்சியுள்ள பகுதிகளில் இருந்தும் உக்ரைன் படையினர் வெளியேற வேண்டும் என்று ரஷியா வலியுறுத்திவருகிறது. இதை உக்ரைன் திட்டவட்டமாக நிராகரித்துவந்தது.

viii. எனவே,சமரசத்துக்கு வழிவகை செய்யும் நோக்கில் இந்தப் பகுதிகளை சுதந்திர பொருளாதார மண்டலங்களாக மாற்ற அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் இருந்து படைகள் விலக்கப்பட்டு, சர்வதேசப் படை நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கோருகிறது.

ix. இந்தச் சூழலில், டொனட்ஸ்க், லுஹான்ஸ் பகுதிகளில் இருந்து வெளியேறி, அந்தப் பகுதிகளில் படைவிலக்கப் பகுதிகளை உருவாக்க உக்ரைன் ஒப்புக்கொண்டுள்ளது அமைதிப் பேச்சு வார்த்தையில் மிக முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

x. எனினும், ஐரோப்பாவின் மிகப்பெ சக்திமையமான ஸபோரிஷியா அணு மின் நிலையத்தை யார் நிர்வகிப்பது என்பது சர்ச்சைக் குரிய விவகாரமாக நீடிக்கிறது. அந்த அணு மின் நிலையத்தை உக்ரைன், ரஷியா, அமெரிக்கா ஆகியவை கூட்டாக நிர்வகிக்கலாம் என்று அமெரிக்கா பரிந்துரைத்துள்ளது. ஆனால் உக்ரைனோ ஸபோரிஷியா அணு மின் நிலையத்தை அமெரிக்காவும் உக்ரைனும் மட்டுமே கூட்டாக நிர்வகிக்க வேண்டும் என்று வலியுறுத் திவருகிறது.

xi. தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 20 அம்ச அமைதி திட்ட வரைவில், அமைதி காலத்தில் உக்ரைன் படையில் அதிகபட்சமாக 8 லட்சம் வீரர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஐரோப்பிய யூனியனில் உக்ரைன் சேரும் தேதியும் அதில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

xii. அமெரிக்கா-உக்ரைன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைவுபடுத்தவும், உக்ரைனுக்கு ஐரோப்பிய சந்தையில் குறுகிய கால சலுகை

வழங்கவும் அந்த வரைவு திட்டம் வலியுறுத்தியுள்ளது.

xiii. உக்ரைனில் 80,000 கோடிடாலர் (சுமார் ரூ.71.87 லட்சம் கோடி) முதலீடு மேற்கொள்ளவும் அதில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் கையொப்பமான பிறகு தேர்தல் நடத்த வேண்டும்; 2014-ஆம் ஆண்டில் இருந்து கைது செய்யப்பட்ட அனைத்து போர்க் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பது போன்ற அம்சங்களும் இந்த வரைவு திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

xiv. இந்தத் திட்டத்துக்கு ரஷியா எவ்வாறு பதிலளிக்கிறது என்பதைப் பொருத்து அதன் எதிர்காலம் இருக்கும் என்று கூறப்படுகிறது. இருந்தாலும், போரின் நான்காவது ஆண்டில் இந்த வரைவு திட்டம் ஒரு முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

4. டி.குகேஷ், கோனெரு ஹம்பி உள்ளிட்ட இந்தியர்கள் பங்கேற்கும் ஃபிடே உலக ரேப்பிட் & பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப், தோஹாவில் தொடங்கு கிறது.

5. ஆரவல்லி மலைத்தொடரின் இயற்கை சூழலைப் பாதுகாப்பதற்காக, அங்கு சுரங்கப் பணிகளுக்கான புதிய குத்தகைகளை வழங்க மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தடை விதித்தது. தற்போதைய கட்டுப்பாடுகளைத் தாண்டி, சுரங்கப் பணிகளைத் தடை செய்ய வேண்டிய கூடுதல் பகுதிகளைக் கண்டறியுமாறு இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்வி கவுன்சிலுக்கு (ஐசி எஃப்ஆர்இ) உத்தரவிடப்பட்டுள்ளது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக அதிகாரிகள் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

i. குஜராத் முதல் தில்லி வரை நீண்டிருக்கும் ஆரவல்லி மலைத்தொடரைப் பாதுகாக்கவும், முறைப்படுத்தப்படாத சுரங்கத் தொழிலைத் தடை செய்யவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையானது ஒட்டுமொத்த ஆரவல்லி மலைத்தொடருக்கும் பொதுவானது.

ii. சுரங்கப் பணிகள் தடை செய்யப்பட வேண்டிய கூடுதல் இடங்களை, அந்தப் பகுதியின் இயற்கை அமைப்பு மற்றும் நிலப்பரப்புத் தன்மையை ஆய்வு செய்து கண்டறியுமாறு 'ஐசி எஃப்ஆர்இ' அமைப்புக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆரவல்லி மலைத்தொடருக்கான 'நிலையான சுரங்க மேலாண்மைத் திட்டத்தை (எம்பிஎஸ்எம்) அறிவியல்பூர்வமாகத் தயாரிக்கும் போது, இந்த ஆய்வையும் மேற்கொள்ள அந்த அமைப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

iii. தற்போது இயங்கி வரும் சுரங்கங்கள் இனி மிகக்கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும். வட மாநிலங்கள் பாலைவனமாவதைத் தடுப்பதிலும், நிலத்தடி நீரைச் சேமிப்பதிலும் ஆரவல்லி மலைத்தொடர் முக்கியப் பங்கு வகிப்பதால், அதைப் பாதுகாக்க அரசு உறுதியாக உள்ளது என்றனர்.

iv. முன்னதாக, ஆரவல்லி மலைத்தொடர் குறித்து மத்திய அமைச்சகம் நியமித்த நிபுணர் குழு, உச்சநீதிமன்றத்தில் ஒரு புதிய விளக்கத்தை அண்மையில் சமர்ப்பித்தது. அதன்படி, உள்ளூர் நிலப்பரப்பில் குறைந்தபட்சம் 100 மீட்டருக்கு மேல் உயரம் கொண்டவை 'ஆரவல்லி மலை' எனக் கருதப்படும். அதே போல், 500 மீட்டர் இடைவெளிக்குள் அமைந்துள்ள இரண்டு அல்லது

அதற்கு மேற்பட்ட 100 மீட்டர் உயர மலைகள் 'ஆர வல்லி மலைத்தொடர்' என அழைக்கப்படும்.

v. இந்த விளக்கத்தை உச்சநீதிமன்றம் கடந்த மாதம் ஏற்றுக் கொண்டது. இதனால் 100 மீட்டருக்கும் குறைவான உயரம் கொண்ட மலைப்பகுதிகளில் சுரங்கப் பணிகள் தொடர இது வழிவகுக்கும் என்றும், நிலத்தடி நீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு பாலைவன நிலமாக மாற வாய்ப்புள்ளதாகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.